1978 செப்டம்பர் 9]

Aruvikarai weir.

* *Q. No.* 120.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a regulator (road-*cum*-dam) in the place of Aruvikarai weir at Thiruvettar in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சின்னாற்று நீர்ப்பாசனம்.

*வினா எண். 121— திரு. சொ. ந. பழனிசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோவை மாவட்டம், மத்துவராயபுரம் கிராமத்தைச் சேர்ந்த சிங்கபதி மலைவாழ் மக்களுக்கு சின்னாற்றில் வரும் தண்ணீரைப் பயன்படுத்த கூடுதல் வசதி செய்து கொடுக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

இல்லை.

நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைப் பகுதியில் புதிய சாலைகள்.

*வினா எண். 122— திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி சர்க்கரைத் தொழிற்சாலை நிறுவனம் கரும்பு செஸ் நிதியாக ஆண்டுதோறும் எவ்வளவு ரூபாய் கொடுக்கிறது ?

(ஆ) அந்த நிதியிலிருந்து அந்தப் பிரதேசத்தில் புதிய சாலைகள் நிர்மாணிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா?